மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தேர்தல் சீட்டுக்களை வழங்கிக் கொண்டிருந்த இடத்தில், அந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக, காங்கிரஸ் தொண்டர்கள் இடையே கைகலப்பு நடந்து கலவரம் ஏற்பட்டது. அப்போது அங்கே அதைத் தவிர்க்கும் பொருட்டு போலீசார் வந்து கலைந்துபோகும்படி கூட்டத்தைக் கலைத்திருக்கிறார். அதில் தான் தாக்கப்பட்டதாக திரு. அய்யாசாமி அவர்கள் புகார் கொடுத்தார். புகார் கிடைத்ததின் பேரில் விசாரித்ததில் அவர் தாக்கப்படவில்லை என்ற விவரம் தெரிய வந்தது.

Teleprinter.

* 166 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state the names of Ministers of Tamil Nadu in whose residences Teleprinters have been installed at Government cost ?

தந்தி முறை தட்டச்சுப் பொறி.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழக அமைச்சர்கள் யார் யார் இல்லத்தில் அரசாங்கச் செலவில் டெலிபிரிண்டர் வைக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: முதலமைச்சர் அவர்களின் இல்லத்தில் மட்டும் அரசாங்க செலவில் பிரஸ் டிரஸ்ட் ஆப் இந்தியா நிறுவனத்தாரின் தந்தி முறை தட்டச்சுப் பொறி ஒன்று பொறுத்தப்பட்டுள்ளது.

Urban Land Tax.

* 167 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the details regarding the amount of Urban Land Tax, collected every year from the date of its introduction up to 31st March 1968, be placed on the Table of the House?

நகர்புற நிலவரி.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

"அர்பன் லாண்டு டாக்ஸ்" போட்டு, அமுலுக்கு வந்த தேதியிலிருந்து 1968 மார்ச் 31-ஆம் தேதிவரை, ஆண்டுதோறும் வசூலான தொகை விவரம் சபையில் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மன்றத்தின் முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இந்த வரி செல்லாது என்று உத்தரவிட்டுவிட்ட காரணத்தால் யாரிடம் அதை வசூலித்தார்களோ அதைத் திருப்பிக் கொடுக்க அரசு முயற்சிக்குமா?

---

a Printed as Appendix I on page 568

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அந்த நிலைமை இப்போது எழவில்லை. அர்பன் லாண்ட் டாக்ஸ் செல்லாது என்று ஹைகோர்ட் தீர்ப்பு வழங்கவில்லை. அந்தச் சட்டம் அரசியல் சட்டப்படி செல்லத்தக்கதுதான். இருந்தாலும் அதில் இருக்கிற அந்த நிலத்திற்கு விலை நிர்ணயிக்கிற 6-வது விதி மட்டும் அரசியல் சட்ட 14, 19-வது விதிகளுக்கு முரணாக இருப்பதாக ஹைகோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறது அதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் இப்போது நாம் அப்பீல் செய்துகொண்டிருக்கிறோம். அது முடிகிற வரையில் புதிதாக வசூல் செய்யக்கூடாது என்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதே தவிர வசூலித்ததைத் திருப்பிக் கொடுப்பது என்பதோ இந்த சட்டப்படி செல்லுபடியாகுமா என்பதோ தீர்ப்பைக் கொண்டுதான் முடிவுசெய்ய வேண்டும்.

Non-distribution of Rice.

* 168 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that from 4th August 1968 to 7th October 1968 rice has not been distributed in Chakkampatti of Madurai district; and

(*b*) if so, the reason therefor ?

அரிசி வினியோகம்.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 4—8—1968 முதல் 7—10—1968 வரை மதுரை மாவட்ட சக்கம்பட்டியில் அரிசி வினியோகம் செய்யவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) & (இ) சட்டபூர்வமான பங்கீடு அமுலில் உள்ள இடங்களில், மக்களுக்கு உணவு தான்யங்கள் வழங்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுள்ளது. குடும்ப கார்டு அமுலில் இருக்கும் இடங்களில் தனியார் வியாபாரத்திற்கு எவ்வித தடையும் இல்லை. குடும்ப கார்டு உள்ள இடங்களில் உள்ளவர்கள் வெளிச் சந்தையில் உணவு தான்யங்களை வாங்கி உபயோகிக்க எவ்விதத் தடையும் இல்லை. ஆகவே, அந்த இடங்களில், அறுவடை உள்ளபோதும், உணவு தான்யங்கள் வெளிச் சந்தையில் தாராளமாக கிடைக்கும்போதும் அதற்கு தகுந்தாற்போலவும் அரசாங்கத்தின் கையிருப்பை ஒட்டியும் மக்களுக்கு வழங்கும் உணவுப் பொருள்களின் அளவு மாற்றப்படுகிறது அல்லது உணவுப் பொருள்கள் வழங்குவது நிறுத்தப்படுகிறது. குடும்ப கார்டு அமுலில் உள்ள இடங்களில் அறுவடை நடைபெறுகின்றதா என்பதையும், வெளிச்சந்தையில் உணவு தான்யங்கள் கிடைக்கின்றதா என்பதையும் அரசாங்கத்தின் கையிருப்பு முதலியவைகளைப் பொறுத்தும் தான்யங்களின் அளவை கூட்டியோ, குறைத்தோ வழங்குவது அல்லது அரிசி